DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 193/2018**

Deposition of :PW - 10

| | | |
|---|---|---|
| Name | : திரு. சுந்தர்ராஜன் | Caste: |
| Father's Name: | திரு. அண்ணாமலை | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 19th day of April - 2023.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் காவலர் பயிற்சி மையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 25.06.2017 அன்று சேலம் மாவட்டம், வாழப்பாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, வாழப்பாடி வட்டம், முத்தம்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலரான திரு.கோகுலவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப் பெற்று, அதனடிப்படையில் அன்று காலை 7 மணிக்கு ஒரு வழக்கினை வாழப்பாடி காவல்நிலைய கு.எண். 315/2017 ஆக இதச–302 பிரிவின் படி பதிவுசெய்தேன். அந்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

என்னால் பதிவு செய்யப்பட்ட அச்சுபடிவ முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.–10**. புகார் மற்றும் அச்சுபடிவ முதல் தகவல் அறிக்கையின் அசல் ஆகியவற்றை குற்றவியல் நடுவர் எண். 6, சேலம் அவர்களுக்கு அனுப்பிவைத்து, மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்க அனுப்பி வைத்து, முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை

விசாரணைக்காக வாழப்பாடி காவல்நிலைய ஆய்வாளர் திரு.உமாசங்கர் அவர்களது பார்வைக்கு காலை 8.00 மணிக்கு வைக்கப்பட்டது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அவர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய தயாராக இல்லை. வழக்கு விசாரணையை வேறு தேதிக்கு ஒத்திவைக்கக்கோரி அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.